ஊடக அறிக்கை

01 October 2026

PSTA வர்த்தமானி: கருத்துச் சுதந்திரத்தை அச்சுறுத்தி டிஜிட்டல் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்கும் முயற்சி!

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டமூலம்" (PSTA) (2026 செப்டம்பர் 22) மூலம், குடிமக்களின் கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம் மற்றும் டிஜிட்டல் உரிமைகளை மிகக் கடுமையான முறையில் கட்டுப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சியை, "இணைய ஊடகச் செயற்பாடு" (IMA) ஆகிய நாங்கள் கடும் வெறுப்புடன் கண்டிக்கிறோம்.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, மூல வரைவில் இருந்த 55ஆம் பிரிவு (தகவல் தொடர்புகளை இடைமறித்தல் மற்றும் மறைகுறியாக்கம் செய்யும் அதிகாரங்கள் - Decryption) போன்ற சில அம்சங்களைத் திருத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தபோதிலும், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சட்டமூலத்தின் மூலம் அரசாங்கத்தின் உண்மையான அடக்குமுறைத் தன்மை மாறவில்லை. முன்மொழியப்பட்ட PSTA சட்டமூலம், பழைய PTA-வின் அடக்குமுறை விலங்குகளை டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் மெருகூட்டி, ஜனநாயக வெளியின் மீது சுமத்தப்படும் புதிய டிஜிட்டல் சர்வாதிகாரம் என்பது தெளிவாகிறது.

டிஜிட்டல் சுய தணிக்கை (Digital Self-Censorship)

சட்டமூலத்தின் 11ஆம் பிரிவு நியாயமான ஊடக அறிக்கையிடலுக்குச் சில பாதுகாப்பை வழங்குவதாகக் கூறப்பட்டாலும், கைது செய்யப்படும் அச்சமும், தாம் "நல்லெண்ணத்துடன்" செயற்பட்டதை நிரூபிக்க வேண்டிய நடைமுறைச் சவாலும் காரணமாக, ஒட்டுமொத்த சமூகமும் தமது கருத்து வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்திக்கொள்ளும் "டிஜிட்டல்

சுய தணிக்கை" நிலைக்குத் தள்ளப்படும் கடுமையான ஆபத்து உருவாகிறது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகங்களுக்கு எதிரான கடும் அச்சுறுத்தல்கள்:

- **டிஜிட்டல் வெளியும் "எதிர்ப்பு - பயங்கரவாதம்" என்ற விளக்கமும் (பிரிவு 3):** "அரசாங்கத்தை முறையின்றி நிர்ப்பந்தித்தல்" அல்லது "தகவல் தொடர்பு அமைப்புகளுக்குக் கடுமையான இடையூறு ஏற்படுத்தல்" ஆகியன பயங்கரவாதக் குற்றங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதனால், அரசாங்கக் கொள்கைகளுக்கு எதிராகச் சமூக ஊடகங்கள் வழியாக ஒழுங்கமைக்கப்படும் இணையப் பிரசாரங்கள், இணைய மனுக்கள் மற்றும் ஹேஷ்டேக் அணிதிரட்டல்கள் பயங்கரவாதச் செயல்களாகக் குற்றம் சாட்டப்படும் ஆபத்து உருவாகிறது. (உதாரணமாக, 2022இல் #GotaGoHome ஹேஷ்டேக் முன்னிலை வகிக்க, டிஜிட்டல் வெளியிலும், காலிமுகத்திடல் உள்ளிட்ட நாடு முழுவதும் நடைபெற்ற பௌதிக மக்கள் எழுச்சியிலும் இயக்கம் நடைபெற்றது.)
- **படைப்பாற்றலுக்கும் நையாண்டிக்கும் தடை (பிரிவு 9):** "மறைமுகமாகத் தூண்டுதல்" போன்ற தெளிவற்ற, விரிந்த சொற்றொடர்களைப் பயன்படுத்தி, சமூக ஊடகங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சுவரொட்டிகள், மீம்கள் (Memes), அரசியல் நையாண்டிகள், Reels/TikTok காணொளிகள் மற்றும் குறியீட்டு படைப்புகள் தொடர்புடைய குற்றங்களாக அடையாளம் காணப்பட்டால், 15 ஆண்டுகள் வரையான கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்க இச்சட்டமூலம் இடமளிக்கிறது.
- **பகிர்தல், Retweet செய்தல் மற்றும் இணைப்புகளை வெளியிடுவதற்குத் தடை (பிரிவுகள் 10 மற்றும் 59):** ஒரு ஆவணத்தை அல்லது பதிவைப் பகிர்தல் (Share), Retweet செய்தல், Forward செய்தல் அல்லது அதற்குரிய இணைப்புகளை (URL Links) உள்ளடக்குதல் ஆகியவை "பயங்கரவாத வெளியீடுகளைப் பரப்புதல்" என வரையறுக்கப்படும் சாத்தியம் உள்ளது. அத்தகைய

சூழலில், வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் இணையவழி வெளியீடுகளை நேரடியாகத் தணிக்கை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

- **ஊடக மூலங்களின் இரகசியத்தன்மை ஒழிக்கப்படுதல் (பிரிவு 15):** தகவல் வழங்காதிருப்பதை 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாக்குவதன் மூலம், புலனாய்வு ஊடகவியலாளர்களும் குடிமக்கள் ஊடகவியலாளர்களும் தமக்குத் தகவல் வழங்கும் மூலங்களின் (Whistleblowers) இரகசியத்தைப் பாதுகாக்கும் உரிமை இல்லாமல் போகிறது.
- **அறிக்கையிடலுக்கும் புகைப்படம் எடுத்தலுக்கும் கட்டுப்பாடுகள் (பிரிவுகள் 61 மற்றும் 74):** பாதுகாப்புச் செயலாளர் 72 மணி நேரத்திற்கு "தடைசெய்யப்பட்ட இடங்களை" அறிவித்து, அங்கு புகைப்படம்/காணொளி எடுப்பதைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்புப் படைகளின் நடமாட்டங்களையும் விசாரணைகளையும் "இரகசியத் தகவல்" என வரையறுத்து ஊடக அறிக்கையிடலை முடக்கவும் இச்சட்டமூலம் வழிவகுக்கிறது.

எனவே, சர்வதேச மனித உரிமைத் தரங்களுக்கும் சிவில் உரிமைகளுக்கும் முரணான இந்த PSTA சட்டமூலத்தை வெறும் எளிய திருத்தங்களின் மூலம் சீர்செய்ய முடியாது என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) முழுமையாக நீக்குவதாக தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிக்கு மாறாக, அதைவிடவும் அடக்குமுறைத் தன்மை கொண்ட சட்டமூலம் ஒன்றின் (PSTA) மூலம் சிவில் உரிமைகளுக்குக் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவதற்கு எதிரான எமது கடுமையான எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

சம்பத் சமரகோன்
ஒருங்கிணைப்பாளர்
இணைய ஊடகச் செயற்பாடு [IMA]
+94 777 248 304